Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 25 / 2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.8**

| | | | |
|---|---|---|---|
| Name: | ராம்பாலாஜி | Calling: | உதவி மருத்துவர் |
| Father's / Husband's Name: | ராஜேந்திரன் | Religion: | |
| Village: | காமராஜர் நகர் | Age: | 37 |
| Taluk: | திருப்பத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 06.08.2025

(1 ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 8 முதன்மை விசாரணை

நான் தற்போது ஆண்டியப்பனூர் அரசு சமுதாய சுகாதார நிலையத்தில் சீனியர் உதவி மருத்துவராக பணிபுரிகிறேன். கடந்த 29.06.2017ம் தேதி வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது மாலை சுமார் 05.55 மணியளவில் வேலு, வயது 64, த/பெ பெருமாள், குந்தாணி மேடு, இளையநகரம் அஞ்சல், வாணியம்பாடியிலிருந்து அவருடைய மகள் கோமதி சிகிச்சைக்காக அழைத்து வந்தார். மேலும், அவருடன் கோபிநாத் என்பவரும் வந்திருந்தார். வேலு என்பவரை விசாரித்தபோது 29.06.2017ம் தேதி மாலை 05.00 மணியளவில் தெரிந்த 3 ஆண்நபர்கள் கை, கட்டை, கத்தி போன்றவற்றால் அவரது வீட்டின் அருகே அவரை அடித்ததாக கூறினார். அவரை பரிசோதித்தபோது இடது காலில் சிராய்ப்பு காயம் 1X1 செ.மீ. அளவிலும், இடது முழங்காலில் ஒரு சிராய்ப்பு காயம் 2X1 செ.மீ.அளவிலும், வலது தோள்பட்டையில் ஒரு சிராய்ப்பு காயம் 10X1 செ.மீ.அளவிலும், வலது

நெஞ்சுப்பகுதியில் ஒரு சிராய்ப்பு காயம் 8X5 செ.மீ.அளவிலும், வலது புருவத்தில் ஒரு கிழிந்த காயம் 1X1 செ.மீ.அளவிலும், கீழ் தாடையில் பல் வலி என்றும், பல் இல்லை என்றும் சொன்னதால் அவரின் பற்களை பரிசோதனை செய்யும்பொருட்டு பல் மருத்துவருக்கு பரிந்துரை செய்தேன். பின் 30.06.2017ம் தேதி அவராகவே முன்வந்து மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு செல்வதாக கூறி வீட்டிற்கு சென்றுவிட்டார். பின் 05.07.2017ம் தேதி வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்த பல் மருத்துவரை அணுகி பரிசோதித்தபோது காயம் ஆறிய எலும்பு குழி கீழ் தாடையில் நம்பர் 4, 4 காணப்பட்டது. மேற்படி நபருக்கு விபத்து பதிவேடு மற்றும் பல் மருத்துவரின் சான்று வாயிலாக கீழ் தாடையில் உள்ள 4, 4 என்ற பல் உடம்பிலிருந்து விழப்பட்டதாக கூறினார். அதனால் கொடுங்காயம் என சான்று வழங்கியிருந்தார். **வேலுவின் காயச்சான்று அ.சா.ஆ.9ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

கோபிநாத் என்பவரை பரிசோதித்தபோது அவருக்கு வலது கன்னத்தில் ஒரு சிராய்ப்பு காயம், மூக்கின் மேல் ஒரு சிராய்ப்பு காயம் 1X1 செ.மீ.அளவிலும், இடது கன்னத்தில் ஒரு சிராய்ப்பு காயம் 1X1 செ.மீ.அளவிலும், மனித கடிக்கான தழும்புகள் அவருடைய வலது நடுவிரலில் இருந்தது. மேலும், அவர் மருத்துவமனையிலிருந்து 30.06.2017 மதியம் 01.00 மணியளவில் மருத்துவமனை வளாகத்திலிருந்து யாரிடமும் சொல்லாமல் தானகவே சென்றுவிட்டார். அவருக்கு பரிசோதனை செய்ததில் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என சான்று வழங்கினேன். **கோபிநாத்தின் காயச்சான்று அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

விபத்து பதிவேட்டில் வேலு என்று தான் குறிப்பிட்டு கூறியுள்ளார், அது அவரது மகள் கோமதி என்பவர் கூறினார். வேலு என்வர் சிகிச்சைக்கு வந்தபோது பேச முடியாத நிலையில் இருந்தாரா என்றால் இல்லை, அவர் தான் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் விவரத்தை கூறினார். வேலு சம்பவம் நடந்த இடத்தை பற்றி குறிப்பிட்டு கூறியுள்ளாரா என்றால் அவரது வீட்டின் அருகே என்று கூறியுள்ளார். வேலுவிற்க்கு மார்பில் ஏற்பட்ட சிராய்ப்பு காயம் கீழே தவறி விழுந்தால் கூட ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். தோள்பட்டையில் ஏற்பட்ட சிராய்ப்பு காயமும் கீழே தவறி விழுந்தால் கூட

ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். வலது புருவத்தில் ஏற்பட்ட காயமும் தவறி படிக்கட்டில் விழுந்தால் கூட ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் நான் வேலு என்பவரை பல் மருத்துவரின்சிகிச்சைக்காக பரிந்துரை செய்துள்ளேன் என கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். என்னிடம் விசாரணை அதிகாரி விசாரித்து வாக்குமூலம் பெற்றது சம்மந்தமாக தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

போலிசார் விசாரணையில் பல் மருத்துவரின் சான்றிதழின் அடிப்படையில் தான் வேலுவுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியுள்ளேன் என கூறியுள்ளேனா என்றால் நான் விசாரணை அதிகாரியிடம் கூறியிருப்பேன், ஆனால் அவர் அதை பற்றி குறிப்பிடவில்லை. அ.சா.1 தன்னை தெரிந்த 3 நபர்கள் தான் தாக்கியதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். பல்மருத்துவர் வேலுவிற்க்கு பல் விழுந்ததாகவோ அல்லது வாய் வீக்கம் என்றோ குறிப்பிட்டிருக்கிறாரா என்றால் அ.சா.1 உடனடியாக பல் மருத்துவரை அணுகி பார்க்காததால் அதை பற்றி குறிப்பிடவில்லை. என்னிடம் அ.சா.1 சிகிச்சைக்கு சேர்ந்த சமயம் அவருக்கு வாய் வீக்கமாக இருந்ததா என்றால் இல்லை, அவ்வாறு இருந்திருந்தால் குறிப்பிட்டிருப்பேன். பல் மருத்துவர் அ.சா.1ஐ சிகிச்சை செய்து கொடுங்காயம் என வழங்கிய சான்றிதழை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்திருப்பேன், ஆனால் விசாரணை அதிகாரி அது பெற்றிருப்பாரா என்று தெரியவில்லை. கோபிநாத் என்பவர் அன்றைய தினமே சிகிச்சைக்காக உள்நோயாளியாக சேர்ந்தார் என்றால் சரிதான். கோபிநாத் என்பவர் 30.06.2017ம் தேதி சுமார் எத்தனை மணியளவில் மருத்துவமனையை விட்டு சென்றிருப்பார் என்றால் மதியம் 01.00 மணிஅளவில் சென்றிருப்பார்.

கோபிநாத் என்பவர் மருத்துவமனையை விட்டு சென்றது எனக்கு எப்படி தெரியும் என்றால் அன்று பணியில் இருந்த மருத்துவர்கள் கூறி தான் தெரியும். யார் சொல்லி கோபிநாத் என்பவர் மருத்துவமனையை விட்டு சென்றது எனக்கு தெரியும் என்றால் மருத்துவமனை பதிவேடுகள் மற்றும் பணியாளர்கள் மூலம் தெரியவந்தது. மருத்துவமனை பதிவேட்டில் கோபிநாத் எத்தனை மணி வரை மருத்துவமனையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 01.00 மணி. உள்நோயாளிகள் இயற்கை உபாதைகளுக்காக சென்றிருந்தால் கூட அரை மணி நேரம் தாமதமாக வர கூடும் என்றால் அவ்வாறு இருந்திருந்தால் மருத்துவர் பதிவேட்டில் எழுதியிருப்பார்.

மருத்துவமனையில் மருத்துவர் பார்க்கும் சமயம் இல்லாததால் அவ்வாறு மருத்துவ பதிவேட்டில் எழுதி வைத்திருந்தார் என்றால் அவர் சொல்லாமல் சென்றிருந்ததால் அவ்வாறு எழுதி வைக்கப்பட்டிருக்கும். கோபிநாத் என்பவர் மருத்துவ பதிவேட்டில் எழுதி வைத்தது போல் இல்லாமல் அவர் இயற்கை உபாதைகளை கழிக்க சென்ற சமயத்தில் அவ்வாறு எழுதப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. கோபிநாத் என்பவர் இயற்கை உபாதைகளை கழித்துவிட்டு மீண்டும் வந்த பின் அந்த விவரத்தை மருத்துவ குறிப்பேட்டில் எழுதாமல் அவரை மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டார்கள் என்றால் அது பற்றி தெரியவில்லை. அதை பற்றி தெரியாமல் போலிசாரிடம் தவறான வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) ராம்பாலாஜீ

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2025.08.07 17:57:45 +0530